**புதுச்சேரி அரசு**
**காவல்துறை துணை தலைவர் அலுவலகம்**
**புதுச்சேரி**

புதுச்சேரி, தேதி: 20.01.2022

**பத்திரிக்கைச் செய்தி**

இந்த செய்தியானது, நடந்துகொண்டிருக்கும் புதுச்சேரி காவல்துறை ஆட்சேர்ப்பு முறையில் தகுதியான விண்ணப்பதாரர்களுக்கான கோவிட்-19 சோதனை தொடர்பானது.

திட்டமிட்டபடி தகுதியான விண்ணப்பதாரர்களுக்கான கோவிட்-19 சோதனை 18.01.2022 முதல் புதுச்சேரி கோரிமேடு காவல்துறை விருந்தினர் மாளிகையில் நடத்தப்படுகிறது. காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் பகுதிகளிலும் இதுபோன்ற ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

தகுதியான விண்ணப்பதாரர்களில் சிலர் கோவிட் பாசிட்டிவ் என பதிவாகியிருப்பது தெறிகிறது. எனவே, அவ்வாறான கோவிட் பாசிட்டிவ் விண்ணப்பதாரர்களுக்கு 21.02.2022 அன்று கோரிமேடு, ஆயுதப்படை வளாகம், போலீஸ் மைதானத்தில், PST/PET/சான்றிதழ் சரிபார்ப்பை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, புதுச்சேரி மற்றும் பிற பிராந்தியங்களில் உள்ள சம்பந்தப்பட்ட பொறுப்பாளர்கள் / எஸ்பிகளுக்கு தகுந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

தகுதியான விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்பட்ட மையங்களைத் தவிர மற்ற அரசு மருத்துவமனைகள் மற்றும் சுகாதார மையங்களிலும் பரிசோதனை செய்து பாசிட்டிவ் என பதிவாகி உள்ளதாகவும் தெரிகிறது. எனவே, அத்தகைய கோவிட் பாசிட்டிவ் விண்ணப்பதாரர்கள் தங்களின் கோவிட் பாசிட்டிவ் அறிக்கையை ஸ்கேன் செய்து உடனடியாக புதுச்சேரி கோரிமேட்டில் உள்ள ஆட்சேர்ப்பு பிரிவு எஸ்பிக்கு **cmtpap.pon@nic.in** என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் **recruitmentcell.pol@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு நகளலையும் பதிவேற்றம் செய்யவும். (அவர்ரவர்களின் அனுமதி அட்டைகளின்படி PST/PET க்கு உள்ள தேதியில் அல்லது அதற்கு முன்).

அதன்படி, அத்தகைய கோவிட் பாசிட்டிவ் விண்ணப்பதாரர்களுக்கான மாற்றுத் தேதி, கோவிட் நெறிமுறைகளின்படி ஒதுக்கப்பட்டு, மின்னணு ஊடகம்/மின்னஞ்சல் மூலம் தனித்தனியாக அவர்களுக்குத் தெரிவிக்கப்படும்.

அவர்களின் அட்மிட் கார்டிள் உள்ளபடி PST மற்றும் PET தேதிக்குப் பிறகு பெறப்படும் அத்தகைய கோரிக்கைகள் பரிசீலிக்கப்படாது.

*****